**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.25 /2014</u>**

DW 2 – திரு. முத்துராமலிங்கம் நாள். 06.03.2026.

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1.வாதி குடியிருக்கும் வீடு ஓட்டுவீடு என்றால் ச ரிதான். மேற்படி வீடு சுமார் 15 முதல் 20 வருடங்களுக்குள் கட்டப்பட்டிருக்கும். எங்கள் ஊரில் தெற்கிலிருந்து வடக்கே செல்லும பிரதான சாலைக்கு கிழக்கு பக்கம்அந்த வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதான சாலையிலிருந்து அந்தவீட்டிற்கு செல்ல பாதை எங்கு உள்ளது என்றால் சர்வே எண் 452/11 ல் பொது பாதை உள்ளது. மேற்படிவீட்டிற்கு மின் இணைப்பு சர்வே எண்.181/56 வழியாக செல்கிறது. மேற்படி வீட்டிற்கு சர்வே எண். 181/55 வழியாக தான்மின் இணைப்புசெல்கிறது என்றால் தற்சமயம் மின் இணைப்பானது இவ்வழியாக தான்போய் கொண்டிருக்கிறது. மேற்படி மின்இணைப்பு செல்லும் சொத்து வழியாக தான்வாதி அவரதுவீட்டிற்கு பாதையாக பயன்படுத்தி சென்று வருகிறார் என்றால் சரியல்ல.

2. வாதி சர்வே எண் 181/65 வழியாக அவரது வீட்டிற்கு பாதையாக பயன்படுத்தியதை இடையூறு செய்ததாக வாதி என் மீதும், எனதுசகோதரர் சுப்ரமணியன் என்பவர் மீதும் உரிமையியல் வழகக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்காகும். மேற்படி வழக்கின் தீர்ப்பு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி OS 134/2009 இல் ஏற்பட்ட தீர்ப்பில் அந்த வழக்கின் தாவா சொத்தானது எனக்கு பாத்தியம் என்று தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. வழக்கானது எனக்கு சாதகமாக தான் தீர்ப்பானது. தாவா சொத்து வழியாக வாதி வீட்டிற்கு மின்இணைப்பு செல்வதற்கு எங்கள் ஊரில் வேறு யாரும் வழக்கு தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் செல்வதால் நான்தான் வழக்காடமுடியும். வழக்குசொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்காடுகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 181/56 ஆகும்.வழக்கின் சொத்து விவரம் எனக்கு தெரியும். சர்வே எண் 181/55 ல் கண்டுள்ள சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வாதி குடியிருக்கும் வீட்டிற்கு அவர் மின்கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

3. வாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு செல்வதை அப்புறப்படுத்த சொல்லி கிராமத்தினர் யாரும் உரிய நிர்வாகத்தினரிடம் மனு கொடுக்கவில்லை என்றால்சரிதான். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி யார் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கின் 2ம்பிரதிவாதி 20.02.2014 தேதி வாதியின் வீட்டிற்கு செல்லும் மின் இணைப்பை துண்டிக்க முயற்சித்தார்கள் என்றால் சரிதான். நான்மனு அளித்ததன் பேரில் பொது பாதை வழியாக மின் இணைப்பு கொடுக்க முயற்சித்தார்கள். மேற்படி 2ம் பிரதிவாதி மின் இணைப்பை துண்டிக்க முயற்சித்ததால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவர் என்ன நோக்கத்தோடு வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனுதாக்கல் செய்து அதன்பேரில் சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தொடர்பான வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்தவிவரம் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

4.நான் இவ்வழக்கில் எதிர் கோரிக்கை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பை மாற்றி கொடுக்க சொல்லிதான் நான் வழக்காடுகிறேன். நான் 2ம்பிரதிவாதியிடம் கொடுத்த மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் எனக்கு சார்பு செய்யப்பட்டதற்கான குறிப்பு அதில் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் எனக்கு எப்படி கிடைக்கபெற்றது என்று வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் உதவிபொறியாளரிடம் கேட்டு வாங்கினேன். எனக்கு தேவகோட்டையில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. எனது பிள்ளைகளின் படிப்பிற்காக அவ்வப்போது தேவகோட்டைக்கு சென்று

வருவேன். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் கண்டுள்ள தாவா சொத்தின் சர்வே எண் 181/65 என்றால் ச ரிதான். தாவா சொத்து மாரியம்மன் கோவில் சொத்து இல்லை என்றும் அதனால் ஊர்ரார்கள் யாரும் வாதியிடம் பிரச்சனை செய்யவில்லை என்றும் அதனால் அவர்களை தரப்பினராக சேர்க்கவேண்டிய தேவையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எனது சொத்து வழியாக மின் இணைப்பு செல்வதால் தான் நான் தரப்பினராக சேர்ந்து வழக்காடுகிறேன். எனது சொத்து வழியாக மின் இணைப்பு செல்வதற்கு நான் நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஊரார்களுக்கு வழக்கின் விவரம் தெரியாது. தாவா சொத்து கோவில் இடம் தான். நான் வாதியிடம் உள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக நான் இவ்வழககில் தரப்பினராக சேர்ந்து வீண் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாயிலாக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால சரியல்ல. நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்ந்து வழக்காடுவது ஊரார்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. ஊரார்கள் யாரும் என்னை தாவா சொத்து தொடர்பாக தரப்பினராக சேர்ந்து வழக்காட சொல்லவில்லை என்றால் சரிதான்.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை